**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>**

**<u>MC. No. 16/2023</u>**

**<u>18.03.2026</u>**

**திரு. ச. வேலவன், த/பெ. சங்கரநாராயணன்**

RW : 1

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) 1ம் மனுதாரர் என் மனைவி, 2ம் மனுதாரர் என் மகன் என்றால் சரிதான். இருவீட்டார்களும் பேசி தான் திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். 1ம் மனுதாரருக்கு ஏற்கனவே திருமணம் பேசி அது வேண்டாம் என முடிவு செய்து, எனக்கு பேசப்பட்டு நான் சம்மதித்து இந்த திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் திருமணமாகி பல ஊர்களில் வேலை பார்த்தேன். 1ம் மனுதாரர் ஒரு மாத காலம் தான் நன்னிலத்தில் என் வீட்டில் என்னுடன் இருந்தார். அப்போது நான் நன்னிலத்தில் தான் பணியில் இருந்தேன். அதன்பிறகு விழுப்புரத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு சென்றேன்.

2) விடுமுறை நாட்களில் நான் நன்னிலம் வருவேன். ஆனால் என் மனைவி என் வீட்டில் இல்லை. என் மனைவி என்னுடன் விழுப்புரத்தில் உள்ள Quarters ல் தங்கி கொள்வதாக சொன்னார். நான் அதற்கு ஏற்பாடு செய்தேன். அப்போது ஏதோ பிரச்சனை காரணமாக என் மனைவி வரவில்லை. அதன்பிறகு அவர் தொடர்பு கொள்ளவில்லை. நான் விழுப்புரத்தில் இருந்தபோது தான் பணி இடைநீக்கம் செய்யப்பட்டேன். ஏன் பணி இடைநீக்கம் செய்யப்பட்டேன் என்றால் நான் அப்போது மனவேதனையில் இருந்தேன்.

3) அவ்வாறு நான் மனவேதனையில் இருந்தேன் என்று சொன்னது பொய் என்றாலும், நான் பணியில் இருக்கும்போதே தினமும் மது அருந்தியதால் தான் என்னை பணி இடைநீக்கம் செய்தார்கள் என்றாலும் சரியல்ல. என் மனைவியின் வளைகாப்பு நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தார்களா என்றால் என் மனைவிதான் முதல் நாள் இரவு போன் மூலம் சொன்னார். நான் வளைகாப்பிற்கு சென்றேன்.

4) அன்றைய தினமும் நான் மது அருந்திவிட்டு தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் இருந்த ஒரு மாத காலமும் சரியாக தான் இருந்தார் என்றாலும், நான் தான் மது அருந்திவிட்டு அவரை கொடுமைப்படுத்தினேன் என்றாலும் சரியல்ல. அவருக்கு சமையல் வேலை கூட செய்ய தெரியாது. நான் தான் முதலில் எனது மனைவியுடன் சேர்ந்து வாழ வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான்.

5) வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு சேர்ந்து வாழ வேறு ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் எவ்வித சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தபோது அவரை நான் காதில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தினேன் என்றால் அது 100 சதவீதம் பொய் நான் அவரை அடித்ததே கிடையாது.

6) நான் 1ம் மனுதாரர் அடித்து கொடுமைப்படுத்தியதால் அவர் விவாகரத்து கூறி மனு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அதில் நான் முன்னிலையானால் உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் தோன்றா தரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பலமுறை சமரச மையம் சென்றுள்ளேன். நான் பூச்சிமருந்து சாப்பிட்டதாக சொல்லியிருக்கும் நிகழ்வின் தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியவில்லை. அதற்கான நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அப்போது திவ்யா என்னுடன் இருந்து பராமரித்து கொண்டார் என்றால் சரியல்ல.

7) எனது மனைவிதான் மருத்துவமனையில் பராமரித்தார் என்றாலும் நான் அவரை எல்லார் முன்னிலையிலும் திட்டி வெளியேற்றிவிட்டேன் என்றாலும் சரியல்ல. அவர் ஒரு முறை என்னை பார்க்க வந்தார். எனக்கு எலும்பு முறிவு எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 2025 ல் ஏற்பட்டது. அது என் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்த காலத்திலும் மது பழக்கத்தை விடவில்லை என்றாலும் அதற்கு அடிமையாகிதான் 1ம் மனுதாரரை விரட்டி விட்டேன் என்றாலும் சரியல்ல.

8) 1ம் மனுதாரருக்கு வீடு இருக்கிறது என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் கால அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்கிறேன். நான் பலமுறை பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக மனு உரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில் எந்த காரணத்திற்காக பணி இடைநீக்கம் செய்யப்பட்டேன் காட்ட அலுவலகத்திலிருந்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளேனா என்றால் இல்லை.

9) 2ம் மனுதாரர் பள்ளிகூடம் செல்லும் வயதில் இருப்பதால் அவருக்கு ஆகும் செலவுகளை கொடுக்கவும், பராமரிக்கும் கடமையும் எனக்கு உள்ளது என்றால் சரிதான். நான் மாதந்தோறும் பெறும் சம்பள விவரத்தை காட்டும் சம்பளச்சான்று எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வரும் மாதம் 1 ம் தேதி சம்பளத்தின் சான்றை தாக்கல் செய்கிறேன். எனக்கு கிராமத்தில் சொந்தமாக வீடும், நிலமும் உள்ளதா என்றால் வீடு

அம்மா பெயரில் உள்ளது. நிலம் எதுவும் இல்லை. மனுவிற்காக அம்மாவின் பெயரில் வீடு உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) என்னுடைய குழந்தையை பராமரிக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ளதால் மனுதாரர் கூறியவாறு ஜீவனாம்சம் நான் கொடுக்கவேண்டும் என்றால் என்னால் முடிந்த அளவு தொகையை கொடுக்க முடியும். நான் ரூ.20,000/- சம்பளம் வாங்குகிறேன். அதில் ரூ.5,000/- கொடுக்க முடியும். அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்வேன்.

11) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ 1 முதல் எ.ம.சா.ஆ 5 வரையான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஆவணங்கள் என்றாலும், அது என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் அதனை தவிர்க்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.18 15:36:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்